# பொதுமக்களின் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிக்காத 7 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக விசாரணை!

## பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் நடவடிக்கை

பொதுமக்களிடமிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்காத 7 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் பொலிஸ் மோசடி விசாரணைப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குற்றவாளிகள் தொடர்பான தகவல்களை தெரிவிப்பதற்காகவும், அவசர தேவைகளின் போது தொடர்பு கொள்வதற்கும் என உள்ளூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் தொழில்சார் கையடக்க தொலைபேசிக்கு பல தடவைகள் அழைப்பு விடுத்தும் பதிலளிக்காத பொலிஸ் அதிகாரிகள் குறித்து பொது மக்களிடமிருந்து பொலிஸ் மா அதிபருக்கு பெருமளவில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில், பொலிஸ் மோசடி விசாரணைப் பிரிவினரால் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 09 திங்கட்கிழமை 22.04.2024 கதிர் 237







## ஊழல் மற்றும் விரயம் ஆகியனவற்றை தடுப்பதற்கான பொறிமுறையை உருவாக்க அரசாங்கம் தயங்குகின்றது!

### கடன் தாமதிப்பு இதனால்தான் என்கிறார் மரிக்கார் எம்பி.



நாட்டில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முறையாக செயல்படுத்தினால், முதலீட்டாளர்களுக்கு நாட்டின் மீது நம்பிக்கை ஏற்படும், அவ்வாறு நடந்தால் நாட்டிற்கு நேரடியாக அந்நிய முதலீடுகள் கிடைக்கப்பெறும், இருப்பினும், இலங்கைக்கு இரண்டு வருடங்களாக நேரடி அந்நிய முதலீடுகள்எவையும்வரவில்லை என எஸ்.எம். மரிக்கார் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே எஸ். எம். மரிக்கார் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் "சர்வதேச நாணய நிதியத்தின் தவணை பற்றி அரசாங்கம் ஒவ்வொரு கதை கூறுகின்றது. மறுபுறம்,சர்வதேச பிணைமுறி பத்திரதாரிகளுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அரசாங்கம் கூறுகிறது.

2

## சட்டரீதியாகவே சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தெரிவாகியுள்ளேன்!

### அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டரீதியாக பதில் தலைவராக தாம் தெரிவாகியுள்ளதாகவும், இதற்காக 116 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் ஏகமனதான சம்மதத்தை பெற்றதாகவும்நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோட்டே 'சோலிஸ்' மண்டபத்தில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கட்சியின் பதில் தலைவராக விஜயதாச ராஜபக்ஷவின் பெயரை கட்சியின் மூத்த துணைத் தலைவர் ரோஹன லக்ஷ்மன்பியதாஸ முன்மொழிந்ததுடன், கட்சியின் பிரதிச் செயலாளர் சரத் ஏக்கநாயக்க அதனை வழிமொழிந்துள்ளார். இதனையடுத்து பதில் தலைவராக விஜயதாச ராஜபக்ஷவின் பெயர் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இதன்போது நிறைவேற்றுக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி 116 பேர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றத்தின் தடைக்கு உள்ளான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் என்ற ரீதியில் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்

2

## மொட்டுச் சின்னத்தில் களமிறங்குவாரா ரணில்?

அனைத்து தரப்புகளையும் இணைத்துக்கொண்டே ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார் எனவும், பொதுச் சின்னமாக மொட்டுச் சின்னம் அமையாது எனவும் ஜனாதிபதியின் ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யானை சின்னத்தைக் கைவிட்டுள்ளது என முன்வைக்கப்பட்டுவரும் விமர்சனங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யானை சின்னமே ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னம், அதனை நாம் கைவிடவில்லை. யானை சின்னத்தின் கீழ் ஐ.தே.கவின் பயணம் தொடரும். எனினும், ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். அதற்காகப் பொதுச் சின்னமொன்று அவசியம் எனக் கூறப்படுகின்றது. எனினும், அந்தப் பொதுச் சின்னம் மொட்டுக் கட்சியாக அமையாது.

அதேபோல் அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு பயணிப்பதற்கே ஜனாதிபதி முயற்சிக்கின்றார்" - என்றார்.

## அமைச்சர் விஜயதாசவை சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமித்தமை சட்டவிரோதம்!

### மைத்திரியின் வழக்குகளிலிருந்து தப்பிக்கவே இந்த நியமனம் என்கிறார் துமிந்த எம் .பி.



அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமித்தமை சட்டவிரோதமானது எனவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளில் இருந்து தப்பிக்கவே விஜயதாச ராஜபக்ஷ பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

2

## தியத்தலாவை விபத்து இருவர் இன்று கைது!

தியத்தலாவை கார் பந்தயத் திடலில் நேற்று மாலை இடம்பெற்ற போட்டியில் ஏற்பட்ட விபத்து தொடர்பில் இரண்டு போட்டியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் போட்டிக் கண்காணிப்பாளர்கள் நால்வர், பார்வையாளர்கள் மூவர் என 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தப் போட்டியைப் பார்வையிட சுமார் ஒரு இலட்சம் பேர் வந்திருந்தனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கார் பந்தயப் போட்டி 5 வருடங்களின் பின்னர் இந்த வருடம் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



## சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி வழங்கப்பட்டாலும் ஏற்கத் தயாரில்லை

### பீல்ட் மார்ஷல் பொன்சேகா தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி தன்னிடம் வழங்கப்பட்டாலும் அதனைப் பொறுப்பேற்பதற்குத் தயாரில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக மோதல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சந்திரிகா அம்மையார் நீண்ட காலம் அரசியல் செய்தவர். எனவே, சுதந்திரக் கட்சியில் அவர் போஷகர் என்ற பதவி நிலையில் இருக்க வேண்டும். அந்தப் பதவியில் இருந்து தேவையான ஆலோசனைகளை வழங்கலாம்.

மைத்திரிபால சிறிசேன பற்றி என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம்.

2

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## சட்டரீதியாக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் கூறப்படுகின்றது.

கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டதன் பின்னர், அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கட்சியின் பணிகளை மேற்கொள்வதற்காக டார்லி வீதியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கு வந்தபோதும், அவர் தலைமையகத்திற்குள் செல்ல முடியாதவாறு பொலிஸாரால் தடுக்கப்பட்டார். தடைகளை நீக்கி தலைமையகத்திற்குள் செல்ல அனுமதிக்குமாறு அமைச்சர் அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதிலும், தலைமையகத்தில் தொலைந்து போன ஆவணங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு விசாரணைகள் இடம்பெறுவதால், தலைமையகத்திற்குள் செல்ல அனுமதிக்க முடியாது என பொலிஸார் அமைச்சரிடம் தெரிவித்தனர். அப்போது, தலைமைச் செயலகம் அருகே கடும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

பொலிசார் தொடர்ந்தும் அனுமதி மறுத்தமையால் இதற்கு நீதிமன்றத்தின் மூலமே தீர்வு காண வேண்டும் எனவும், அதற்காக நீதிமன்றம் செல்ல தயாராகுங்கள் என பொலிஸாரிடம் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, தனது நியமனம் சட்டப்பூர்வமானது எனவும், கட்சியின் 116 செயற்குழு உறுப்பினர்கள் பதில் தலைவரை தெரிவு செய்யும் நிகழ்விற்கு வந்திருந்ததாகவும் அவர்கள் அனைவரினதும் ஏகோபித்த தெரிவின் மூலம் தன்னை பதில் தலைவராக தெரிவு செய்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ரெசி-93)

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணை இன்னும் தாமதமாகிறது. மேலும், சர்வதேச பிணைமுறி பத்திரதாரிகள் தங்கள் வட்டி விகிதங்களைக் குறைக்க ஒப்புக்கொண்டுள்ள அதேவேளை, அரசாங்கத்திற்கு பல நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

அதன்படி, ஊழல் மற்றும் வீண் விரயம் ஆகியனவற்றை தடுப்பதற்கான ஒப்புக் கொள்ளப்பட்ட விரைவான பொறிமுறையொன்றை உருவாக்க சர்வதேச பிணைமுறி பத்திரதாரர்களால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், அரசாங்கம் இந்த நிபந்தனைகளுக்கு இணங்காததால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை உள்ளிட்ட கடன் மறுசீரமைப்பு தற்போது தாமதமாகியுள்ளது" என்றார். (ரெசி-92)

## பொதுமக்களின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டிலுள்ள 09 மாகாணங்களை உள்ளடக்கிய ஒவ்வொரு மாகாணத்திலும் 05 பொலிஸ் நிலையங்களை எழுந்தமானமாக தெரிவு செய்து இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய புத்தள, தம்பகமுவ, திரிக்கோவில், சீன துறைமுகம், கட்டுபொத்த, வென்னப்புவ, வாதுவ ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் தமது கடமை நேர கையடக்கத் தொலைபேசிகளுக்கு கிடைக்கப்பெற்ற பொது மக்களின் அழைப்புகளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதிலளித்திருக்காதது தெரியவந்தது.

அதன்படி, இந்த காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக சிறப்பு விசாரணைகள் தொடங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக பொலிஸ் மா அதிபரிடம் கேட்டபோது, பொதுமக்களுக்கு சிறந்த கடமைகளை வழங்குவதற்காகவே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு கடமைநேர கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்களின் குறைகளை தெரிவிக்கும் முக்கிய இரகசிய தகவல்களை செவிமடுக்காமல் கடமைகளை புறக்கணிக்கும் பொலிஸ் நிலைய தளபதிகள் கடமைக்கு தகுதியற்றவர்கள் எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மக்கள் விடுக்கின்ற தொலைபேசி அழைப்புகளுக்கு தொடர்ந்தும் இவ்வாறே பதிலளிக்காத நிலையத் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் தொடர்பில் தொடர்பில் உடனடியாக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (ரெசி-91)

## சுதந்திரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவரைப் பற்றி கருத்து வெளியிட்டு எனது நேரத்தை வீணடிக்கத் தயாரில்லை.

அதேவேளை, மே தினக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் செல்வதற்கு நான் தயாரில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் களனி அமைப்பாளர் என்ற வகையில் அந்தக் கட்சியின் மே தினக் கூட்டத்திலேயே பங்கேற்பேன்" - என்றார். (அ)

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

விஜயதாச ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர் அல்லர் எனவும், அவர் செயற்குழு உறுப்பினர் இல்லை எனவும், இதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிலோ அல்லது கட்சியின் வேறு எந்தவொரு முக்கிய நிகழ்வுகளிலோ பங்குபற்றியவரல்ல எனவும் துமிந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டே அண்மையில் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர் எனவும், அந்த வகையில் பார்க்கையில் விஜயதாச ராஜபக்ஷவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்க அமைச்சராக உள்ளவர் தானே எனவும் துமிந்த திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக 400 முதல் 500 வரையான வழக்குகள் இருப்பதாகவும், இதனால் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஏதேனும் ஒரு தொகைக்கு விலைபேசி விற்று விட்டாரோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ரெசி-94)

# தியத்தலாவை விபத்தில் பலியானோரின் விபரம்

தியத்தலாவை கார் பந்தயத் திடலில் நேற்று மாலை இடம்பெற்ற போட்டியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

முத்துசாமி உதயகுமார் (வயது 55, வெலிமடை), சிவகுமார் தனுஷிகா (வயது 08, வெலிமடை), சமத் நிரோஷன் (வயது 09, சீதுவை), ரசிக அபேநாயக்க (வயது 32, அவிசாவளை), சாந்த உபாலிமகே (வயது 62, மாத்தறை), அசேன் ஈனடிகல (வயது 20, அக்குரஸ்ஸ), ஜயவர்தன (வயது 60, மாத்தறை) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். காயமடைந்துள்ள 23 பேரில் மூவர் தற்போது பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# இலங்கை இராணுவத்தினர் 25,000 பேர் சேவைக்கு சமுகமளிக்காது ஓட்டம்!

கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் சுமார் 25,000 பேர் இராணுவ சேவைக்கு சமூகமளிக்கவில்லை எனவும், விடுமுறை பெறாத நிலையிலேயே அவர்கள் சென்றுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த காலங்களில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் மக்களைக் கொலை செய்வதற்காக, துப்பாக்கி ஏந்தியவர்களாகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் எதுவித அறிவித்தலுமின்றி சேவைக்கு திரும்பாத இராணுவத்தினர் என்றும் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்நிலையில், இராணுவத்தினர் மற்றும் ஏனைய படையினர் பாதாள உலக குற்றச்செயல்களில் ஈடுபடுவது மற்றும் அவர்கள் பிரசன்னம் தொடர்பாக இராணுவ பொலிஸார் தற்போது விழிப்புணர்வு விரிவுரைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# தேசிய மக்கள் சக்தியின் மே தினம் 4 இடங்களில்!

தேசிய மக்கள் சக்தியின் மே தின பேரணியை நான்கு இடங்களில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மே தின பேரணியை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்தப் பேரணிகள் நடைபெறும் இடங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமது மே தின பேரணியை நடாத்துவதற்கு காலிமுகத்திடல் மைதானத்தை வழங்குமாறு கோரிய போதிலும் அது வழங்கப்படவில்லை என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (04)

# கடந்த நான்கு மாதங்களில் டெங்கு நோய் பரவல் தீவிரம்

தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்கு நோய் மீண்டும் தீவிரமாக பரவுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் கடந்த நான்கு மாதங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 21000 ஆக அதிகரித்துள்ளதாக தொற்றுநோயியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. இதில் அதிகளவான நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்நிலையில் டெங்கு பரவுவதை தடுக்கும் வகையில் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்குமாறும், கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்குமாறும் சுகாதாரத்துறையினர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர். (ரெசி-95)





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பகவான் ராமகிருஷ்ணர் திருக்கோவில் சிறப்பு அபிடேக சம்புரோட்சண விழா



(வி.ரி.சகாதேவராஜா)

ராமகிருஷ்ண மிஷனின் காரைதீவு சாரதா நலன்புரி நிலையத்தில் புனரமைக்கப்பட்ட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருக்கோவில் சம்புரோட்சண விழா நேற்று (21) ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மாநந்தா ஜீ மகராஜ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட மிஷன் அபிமானிகள் பிரமுகர்கள் அறநெறி மாணவர்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வேத மந்திரங்கள், மங்களாரதி, அங்கு திருப்பள்ளியெழுச்சி, கோயில் வலம், கொடியேற்றம், பூசை, பஜனை, ஹோமம், சொற்பொழிவு என்பன அதிகாலை முதல் இடம்பெற்றன.

## நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்புச் சீருடை அறிமுக நிகழ்வு



(எஸ். சினீஸ் கான்)

தி-பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிறப்புச் சீருடை அறிமுக நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் கலந்துகொண்டார்.

## குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு திருமலையில் அரிசிப் பொதிகள் வழங்கல்



(ஹஸ்பர் ஏ.எச்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரிசி வழங்கும் திட்டத்துக்கு அமைய, திருகோணமலை மாவட்டத்தின் பிரதான நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் நேற்று (21) அங்குராரப்பணம் செய்து வைக்கப்பட்டது. தம்பலகாமம்பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் தலைமையில் கல்மெடியாவ தெற்கு கிராம சேவகரின் பிரிவில் உள்ள முள்ளிப்பொத்தானை விகாரையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அதுகோரள, மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி ஆகியோரின் பங்குபற்றலுடன அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

குறித்த அரிசிப் பொதிகள் 10 கிலோ கிராம் எடை கொண்டதாக, தெரிவு செய்யப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அஸ்வெசும, சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு, அங்கவீனமுற்றோர்கொடுப்பனவு, சிறு நீரக கொடுப்பனவு பெறும் பயனாளிகள் மற்றும் காத்திருப்புப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன.

கல்மெடியாவ தெற்கு கிராம சேவகர் பிரிவில் முதற் கட்டமாக 150 பயனாளிகளுக்கு முதல் கட்டமாக வழங்கப்பட்டதுடன் மொத்தமாக 574 பயனாளிகள் இக்குறித்த அரிசிப் பொதிகளை பெறவுள்ளதுடன், மொத்தமாக தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவில் 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 7104 குடும்பங்களுக்கு இவை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படடுள்ளது.

குறித்த முதல்கட்ட நிகழ்வில்திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# நாட்டு மக்கள் விசித்தரக் கதைகளில் மயங்கி தவறான முடிவுகளை எடுத்ததால் இலங்கை சரிவை அடைந்தது!

## ரணிலைக் காத்திடுங்கள் என்கிறார் ஐ.தே.க தலைவர் வஜிர அபேவர்தன



நாட்டிற்கும்,மக்களுக்கும், சமயத்திற்கும் மதிப்பளிக்கும் ஒரு நாடாக இலங்கை பாதுகாக்கப்பட வேண்டுமாயின் ரணில் விக்ரமசிங்ஹவே நாட்டின் பாதுகாவலராக இருக்க வேண்டும், என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் வஜிர அபயவர்தன தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில் “இலங்கையின் வரலாறு முழுவதும் நம்மவர்களாலேயே நாட்டிற்கு துரோகம் இழைக்கப்பட்டு வந்துள்ளது. தற்போதைய நிலையில் நாட்டை கட்டியெழுப்புவதென்பது எளிதான காரியமல்ல. நாடு பின்னோக்கி பயணித்தால், மீண்டும் ‘கேஸ்’ வரிசைக்கும், பெற்றோல் வரிசைக்கும் மற்றும் சாப்பாட்டிற்கு வரிசையில் காத்திருக்கும் நிலையே ஏற்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகையால், அத்தகைய நிலையை இந்த நாட்டிற்கு ஏற்படுத்த வேண்டாம் என அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

உலகளாவிய பொருளாதாரத்திற்கு தாக்குப்பிடிக்க இன்னும் பல சவால்களுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்தகைய சூழ்நிலையில் இலங்கை மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். பொதுமக்கள் தர்க்கரீதியாக சிந்திக்க வேண்டும். நாடு செல்லும் திசையிலிருந்து மாற்ற வேண்டாம் எனவும், அவ்வாறு நாட்டின் திசையை மாற்றினால் 2020 ஆண்டின் போது 3,000 மில்லியன் டொலர்களும், 2022 ஆம் ஆண்டின் போது 6,000 மில்லியன் டொலர்களும் நாட்டிற்கு தேவைப்படும் நிலை ஏற்படும் எனவும் அப்படியாயின் நாடு சரிவை சந்திக்கும் எனவும் ரணில் விக்ரமசிங்ஹ முன்னரே தெரிவித்திருந்தார்.

ஆனால், நாட்டு மக்களோ அதை ஏற்காமல் விசித்தரக் கதைகளில் மயங்கி தவறான முடிவுகளை எடுத்ததில் நாடு சரிவை அடைந்தது, அதனால்தான் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு தனி ஆசனத்தை மட்டுமே கொண்டிருந்தவர் பிரதமராகவும், ஜனாதிபதியாகவும் மாறி நாட்டின் இரண்டு கோடியே முப்பது லட்சம் மக்களின் காவலனாக இன்று உள்ளார்.

எனவே, இப்போது நாம் சிந்தித்து செயற்பட வேண்டும். இந்த தவறான தேசத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். அதனால் தான் கூறுகின்றோம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் ஒட்டுமொத்த மக்களும் ரணில் விக்ரமசிங்ஹவை பாதுகாக்க வேண்டும், அதை செய்யத் தவறினால் இந்த நாடு அடிமை நாடாகவே மாறி விடும்” என்றார்.

(ரெசி-86)

# தூங்கி வழியும் ஒருவரை சுதந்திரக் கட்சியின் தலைவராக்கி ரணிலின் மடியில் அமர்த்த முயற்சி

## முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் நல்லவரல்ல எனக் கூறி தொட்டாற்சிணுங்கி போல் தூங்கி வழியும் ஒருவரை கட்சியின் தலைவராக்கி ரணில் விக்ரமசிங்ஹவின் மடியில் அமர்த்துவதற்கு ஒரு குழுவினர் முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு தெரிவித்தார். அங்கு பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது: “ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் அரசாங்கத்தில் உள்ள சிலர் ஈடுபட்டுள்ளனர். சந்திரிகா குமாரதுங்க போன்ற கட்சியை வழிநடத்திய ஒரு தலைவர் இவ்வாறான சதிக்கு ஆதரவளிக்க முன்வந்தமை வருந்தத்தக்கது. ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலம் வாய்ந்த கட்சியாக முன்வருவதைத் தடுப்பதற்காகவே இந்த சதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட சுதந் திர கட்சி குழு முற்றிலும் சட்டவிரோதமானது. இது குறித்து தேர்தல் ஆணையத்திடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேர்தல் செயலகம் இது தொடர்பில் சட்டப்படி செயல்படும் என நம்புகின்றோம். இதேவேளை, கட்சித் தலைவருடன் எந்த வேளையிலும் இணைந்து பணியாற்ற நாம் தயாராகவே உள்ளோம்” என்றார்.

(ரெசி-88)

# கொரிய அரசாங்க நிதியுதவியில் 1000 ஸ்மார்ட் வகுப்பறைகள்

கொரிய அரசாங்கம் இலங்கையிலுள்ள 1000 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைப்பதற்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க, பாடசாலை மட்டத்தில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையிலேயே கொரிய அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்தப் புதிய ஸ்மார்ட் வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெசி-89)

# உலகம் சுற்றும் தலைவரா? வாய்ச் சவடால் தலைவரா? தேவை என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்!

## சூழல் மாற வேண்டும் என்கிறார் சஜித் பிரேமதாச



ஒரு காலத்தில் நாட்டில் கோழைத்தனமான தலைவர்கள் இருந்ததாகவும், தற்போது நாட்டின் பணத்தை செலவழித்து உலகம் சுற்றும் தலைவர்கள் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாடு சரிவு நிலையில் இருக்கும் நிலையில், உலகம் சுற்றும் தலைவர் எவ்வளவு தான் உலகை சுற்றி வந்தாலும் நாட்டுக்காக ஒரு சதம் கூட கிடைக்காத நிலையே உள்ளது, தமது கட்சிக்கு கிடைத்த பணத்தை செலவு செய்யும் தலைவர்களும் உள்ளனர், மக்களை கட்டாயமாக அழைத்து வந்து போலியான வாய் சவடால் நிகழ்ச்சிகளை நடத்தி வரும் தலைவர்களும் உள்ளனர. இவ்வாறான நிலையில் நாட்டிற்கு தேவைப்படுவது உலகம் சுற்றும் தலைவரா? வாய் சவடால் விடும் தலைவரா? அல்லது நாட்டிற்காக கடுமையாக உழைக்கும் தலைவரா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பி உள்ளார்.

‘ஸ்மார்ட்வகுப்பறைகள்‘ வழங்கலின் 157வது நிகழ்வில் கலந்து கொண்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் “பகட்டின் மூலமோ, வாய் சவடால் மூலமோ, மோசடி நட்புகள் மூலமோ இந்த நாட்டை காப்பாற்ற முடியாது, எனவே நாட்டிற்கு தேவையானது திருட்டு குடும்ப ஆட்சியாளர்களா? அல்லது உலக சவாரி செய்யும் தலைவர்களா? அல்லது வாய் சவடால் விடும் தலைவர்களா?அல்லது அதிகாரம் இல்லாத நிலையிலும் மக்களுக்கு சேவையாற்றும் தலைவர்களா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும், இதற்கான தீர்மானம் மக்களின் கைகளிலேயே உள்ளது” என்றார். நாட்டை மீட்டெடுக்க சிறந்தவொரு தலைமை தேவை, அவ்வாறான தலைமைக்கு தொலைநோக்கு பார்வையும், வேலைத்திட்டமும் தேவை, வாயிலிருந்து வரும் வார்த்தைகள் நிஜமாக்கப்பட வேண்டும், சொல்வதையே செய்கின்ற செய்வதையே சொல்கின்ற செயற்திறன் தேவை, எனவே இவற்றை நாட்டின் 220 இலட்சம் மக்களுக்கு தலைவர்கள் நிஷரூபித்துக் காட்ட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

இன்று எமது நாடு வங்குரோத்து நிலையில் உள்ளதாலும் அதனை மீட்டெடுக்க சிறந்த வேலைத் திட்டம் இல்லாத காரணத்தினாலும் அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்கள் மற்றும் தொழில் வல்லுனர்கள் தமக்கான போதிய சம்பளமோ இதர கொடுப்பனவுகளோ கிடைக்காத நிலையில் ஆயிரக்கணக்கில் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர், இவ்வாறு புத்தி ஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதானது நாட்டின் வளர்ச்சிக்கு, பொருளாதார மேம்பாட்டிற்கு, சமூக வளர்ச்சிக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து வார்த்தைகளால் கூறி விட முடியாது. இவ்வாறானவர்கள் நாட்டை விட்டு வெளியேறாமல், இந்த நாட்டில் வாழ்ந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தகுந்த சூழலை உருவாக்க வேண்டியது தலைமைகளின் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரெசி-87)



# கலாசாலையில் இடம்பெற்ற அதிதி பேச்சாளர் சிறப்புரை

தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன், ஆசிரியர் கல்வியின் சமகால செல்நெறி என்ற பொருளில் அமைந்த அதிதி பேச்சாளர் சிறப்புரை இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது.

அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வினை பிரதிஅதிபர் க.செந்தில்குமரன் நெறிப்படுத்தினார். நிகழ்வில் அறிமுக உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா நிகழ்த்தினார்.

கலாசாலையின் பிரதி அதிபர் தங்கராசா கோபாலகிருஷ்ணன் நன்றி உரை வழங்கினார். அதிதி உரையாற்றிய பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன், ஆசிரியர் தொழிலில் சிறப்பு,

ஆசிரியர்களுக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய உயர் கல்வி வாய்ப்புகள் குறிப்பாக முனைவர் பட்டம் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் இலங்கையில் இருந்தவாறு தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் இணையவழியில் கற்றுச்சான்றிதழ் பெறுவோரின் பட்டத்திற்கான செல்லுபடித்தன்மை பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்கினார்.



# கற்பிட்டி பிரதேச செயலக மெய்வல்லுனர் போட்டி

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

48 வது தேசிய விளையாட்டு போட்டிகளுக்கு அமைய கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல கிராமசேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த விளையாட்டு கழகங்களின் வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளும் 2024 ம் ஆண்டுக்கான கற்பிட்டி பிரதேச செயலக மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சிகள் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் கற்பிட்டி பிரதேச செயலாளர் ஜே.எம் சமில இந்தியக் ஜயசிங்க தலைமையில் நடைபெற்றன.

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் இருந்து பதிவு செய்யப்பட்ட 24 விளையாட்டு கழகங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் மற்றும் பாடசாலை மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் சகல பிரிவுகளிலும் இருந்து முதலாம் இடங்களைப் பெறும் போட்டியாளர்கள் மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார்கள் என்பதுடன் இந்நிகழ்விற்கு கற்பிட்டி பிரதேச செயலாளரின் அழைப்பை ஏற்று புத்தளம் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அனுர ஜயசிங்க கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிளி. மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது



வட்டக்கச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விற்பனை நிலையம் ஒன்று அண்மையில் (19) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலைய விற்பனைச் செயற்பாடுகளை வட மாகாண விவசாயப்பணிப்பாளர் சு.செந்தில்குமரன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பாட விதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிநுட்ப உதவியாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ்விற்பனை நிலையம் ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரையும் செயற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளரை 077-3028270 அல்லது 071-3028270 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (02)

# குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு அரிசி விநியோகத் திட்டம் ஆரம்பம்



(சர்ஜூன் லாபீர்)

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டில் நிலவிய மிகவும் கடினமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பாதிப்புக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவு வழங்கி, அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டம் தேசிய ரீதியாக நேற்று (21) ஜனாதிபதி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் சுமார் 12,000ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவின் பிரதான நிகழ்வு நேற்று (21) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் முஹம்மது ஹனீபா தலைமையில் கோரக்கல் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லாஹ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக்க அபேவிக்ரம மற்றும் விசேட அதிதிகளாக சம்மாந்துறை மஜ்லிஸ் ஹூரா தலைவர் எம்.ஐ.எம் அமீர்(நளிமி), அம்பாறை மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பீ.அனீஸ், உதவி பிரதேச செயலாளர் யூ.எல் அஸ்லம், அம்பாறை மாவட்ட கணக்காளர் ஐ.எம் பாரிஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம் பி.எம் ஸூசைன், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.எல்.ஐ கபீர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் அதாவுல்லாவின் இணைப்பாளர் ஏ.ஏ.ஏ ஆகீப், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷரபின் இணைப்பாளரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.சீ. எம் சஹீல், பாடசாலை அதிபர், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பாவனைக்குப் பொருத்தமற்ற உலருணவுகள் திடீர் சோதனை நடவடிக்கையில் சிக்கின!



(நூருல் ஸ^தா உமர்)

சுகாதாரமற்ற உணவுப்பொருட்கள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதைத் தடுத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் தலைமையில் தொடர்ந்தும் திடீர் சோதனை நடவடிக்கை சாய்ந்தமருதில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் (20) சாய்ந்தமருது பிரதேச சில்லறைக் கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது சாய்ந்தமருதின் பிரபல கடைகளில் பாவனைக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த தானியங்கள், வண்டுகள் மற்றும் புழுக்கள் நிறைந்த உணவுகள், மனிதப் பாவனைக்கு பொருத்தமற்ற உலருணவுகள், மனித ஆரோக்கியத்திற்குக் கேடுவிளைவிக்கும் பொருட்கள், முறையான களஞ்சிய வசதிகள் மேற்கொள்ளப்படாத உணவுப்பண்டங்கள் போன்றன கைப்பற்றப்பட்டன.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறைக்கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்கள் போன்றவற்றை பார்வையிட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சுகாதாரக் குழுவினர், உரிமையாளர்களுக்கும் உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும் உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் அறிவித்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாகவே இந்தச் சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களான ஏ.எல்.எம். ஜெரின், ஜே.எம். நிஸ்தார் காரியாலய உத்தியோகத்தர் எம்.எச்.எம். பிர்தௌஸ் உட்பட பலரும் இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## விடுதலைப்புலிகளின் தங்கத்தைத் தேடிய
# கடற்படைச் சிப்பாய், பொலிஸ் சார்ஜன்ட் உள்ளிட்ட நால்வர் வசமாக மாட்டினார்கள்

*சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டது எனக் கூறப்படும் பணம் மற்றும் நகைகளை மீட்பதற்காகக் குழி தோண்டிய சந்தேகத்தின் பேரில் கடற்படைச் சிப்பாய் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சிலாவத்துறை கடற்படை தெரிவித்துள்ளது.*

*சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மன்னார் தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.*

*சிலாவத்துறை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்கள் வந்தனர் எனக் கூறப்படும் இடத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30 – 38 வயதுக்குட்பட்ட நாவுல, மெனிக்தென மற்றும் அனுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் சாரதி எனவும், மற்றையவர் தொழிலாளி எனவும் பொலிஸ் விசாரணைகளின்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.*

*(அ)*



# பிரதேச மட்ட கிரிக்கட் போட்டியில் பாலமுனை ரை ஸ்ட்டார் சம்பியன்!

(எம் எப். நவாஸ்)

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் எம்ஏ. இம்றுபஸ்கான் தலைமையில் இடம்பெற்ற பிரதேச கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான கிரிக்கட் போட்டியில் ரை ஸ்ட்டார் கழகம் - 2024ம் வருடத்துக்கான சம்பியனாகியுள்ளது.

25 கழகங்கள் கலந்து கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு அட்டாளைச்சேனை பைனா கழகமும், ரை ஸ்ட்டார் கழகமும் தெரிவாகியிருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரை ஸ்ட்டார் கழக அணி 5 ஓவர் முடிவில் 64 ஓட்டங்கள் பெற, எடுத்து ஆடிய பைனா அணி 18 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.






## காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



(நூருல் ஷுதா உமர்)

காரைதீவு பிரதேச செயலக பிரிவின் 2024 ஆம் ஆண்டிற்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையிலும், பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனின் ஏற்பாட்டிலும் அண்மையில் (19) இடம்பெற்றது.

இதன்போது இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான அனுமதியினைப் பெற்று, கிடைக்கப்பெறும் வளங்களை பயன்படுத்தி உற்பத்தியினை அதிகரிப்பது தொடர்பிலும் விவசாயிகளின், அதிகாரிகளினதும் வேண்டுகோளுக்கமைவாக நீரியல் உயிரின பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

மேலும், அப்பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதனூடாககல்விநடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

அத்துடன் ஏனைய அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பிலும் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சார்பில் அவரது மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். என்.ஷுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க சார்பில் அவரது இணைப்பாளர் ஏ.எம். ஜாஹீர், நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் சார்பில் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபின் இணைப்பாளர் ஏ.ஏ. அசாம், திணைக்களத்தலைவர்கள், துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## குடிசை வீடுகளை அகற்ற இடையூறு இருவருக்கு மறியல்!

ஆசிரியர், அதிபர்கள் சங்கத்தின் அமைப்பாளர் உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் பல குடிசைவீடுகளைஅகற்றமுயற்சித்தபோது அதற்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அளுத்கடை நீதவான் நீதிமன்ற இலக்கம் 3 இல் இன்று (22) இடம்பெற்ற இது தொடர்பான வழக்கு விசாரணையில் உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட சந்தேக நபர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அங்கு அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (04)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்குங்கள்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ: WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!